பிற்பகல் 1–20

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குமுன்னால், தி.மு.க. உறுப்பினர், திரு. கணேசன் அவர்கள் 1999–2000 ஆம் ஆண்டு சமூக நலத் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கியதாகவும், இந்த ஆண்டு குறைந்த நிதி ஒதுக்கியதாகவும் கூறினார். அது தவறான தகவல். 1999–2000 ஆம் ஆண்டைப் பொறுத்தவரைக்கும் Demand 29 என்ற தலைப்பிலே அப்போது ரூ.612.09 கோடி ஒதுக்கப்பட்டது. அதிலே 170.44 கோடி Old Age Pension முதலியவற்றிற்கும் சேர்த்து ஒதுக்கப்பட்டது. அது தற்போது Demand 39–லே 2002–03–லிருந்து மாற்றப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால் தற்போது அந்தத் தொகையையும் சேர்த்துப் பார்த்தால் 612.09–உடன் சேர்த்து 861 கோடி ரூபாய் தற்போது இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. மிக அதிகப்படியான நிதியைத்தான் தற்போது அரசு ஒதுக்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் பதிலுரையை திங்கட்கிழமை அன்று வழங்குவார்கள்.

5. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 21–3–2005 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 21–3–2005, திங்கட்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

21–3–2005 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 21–3–2005 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

60. 2003–2004 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

61. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)